50 ஆண்டுகளாக பல சாதனைகளைப் படைத்து வருகிறார்!

லியோனியின் நகைச்சுவை சிரிக்க மட்டுமல்ல சிந்திக்கவும் வைக்கும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் - லியோனியின் பொன்விழா நிகழ்ச்சியில் வாழ்த்து!

சென்னை, பிப்.1-

சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (31.1.2026) நடைபெற்ற "லியோனி ஆகிய நான்" 50-ம் ஆண்டு பொன் விழா நிகழ்ச்சியில், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களை வாழ்த்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:-

இன்றைக்கு காரைக்குடியில் நடைபெறுகின்ற அரசு விழாவில் பங்கேற்பதற்காக சிவகங்கை மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். இதற்காக, நேற்று சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்த போது, நம்முடைய திண்டுக்கல் லியோனி அவர்கள் என்னை சந்தித்து, இன்று நடைபெறுகின்ற பொன்விழா என்று சொல்லி அழைத்தார். என்னை லேட்டாக அழைத்த காரணத்தினால், நேரில் வரமுடியவில்லை என்றாலும், வீடியோ மூலமாக நிச்சயம் வாழ்த்த வேண்டும் என்று இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கிறேன்.

50 ஆண்டுகளாக மக்களை மகிழ்விக்கும் லியோனி!

பட்டிமன்ற உலகத்தை பொறுத்தவரைக்கும், நம்முடைய லியோனி அவர்கள்தான் கதாநாயகன்! தன்னுடைய கருத்தாழமிக்க சிந்தனைகளால், நயமிக்க நகைச்சுவை பேச்சால், தமிழ் நாட்டு மக்களை 50 ஆண்டுகளாக மகிழ்வித்துக் கொண்டிருக்கக்கூடிய லியோனி அவர்களை பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

பேச்சுலக மேடைகளில் இன்னும் பல்லாண்டு காலம் அவர் கோலோச்ச வேண்டும் என்று முதலமைச்சராக மட்டுமல்ல! அவருடைய ரசிகனாக நான் வாழ்த்துகிறேன்!

சிரிப்பொலி - பேச்சொலி - இசையொலி - மேடையொளி இதுதான் திண்டுக்கல் லியோனி! எப்படிப்பட்ட கவலையில் இருந்தாலும், மன அழுத்தத்தில் இருந்தாலும், லியோனி அவர்களுடைய பேச்சைக் கேட்டால், மகிழ்ச்சியும், புன்னகையும் தன்னால் வரும்! அரசியல் மேடைகள், பட்டிமன்ற மேடைகள் என்று தன்னுடைய வெற்றிக்கொடியை பறக்கவிட்டிருக்கின்ற அவருடைய சாதனை சாதாரணமானது அல்ல! ஐம்பதாண்டுகள் மேடைகளில் நிலைத்து நிற்கின்ற சாதனையை எல்லோராலும் செய்துவிட முடியாது! நிறைய பேர் OUT DATE ஆகிவிடுவார்கள். ஆனால், நம்முடைய லியோனி அவர்கள் UPDATE ஆகி நிலைத்து நிற்கிறார்.

1976-ல் திண்டுக்கல் G.T.N. கலைக் கல்லூரியில் படிக்கும் போது, தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வைத்தியலிங்கன் தலைமையில் அரங்கேறிய அவருடைய பட்டிமன்ற மேடைப் பயணம் - தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறது!

பரபரப்பாக விற்கப்பட்ட பட்டிமன்ற கேசட்டுகள்!

நகைச்சுவை மட்டுமல்ல, பாட்டு, பல குரல் என்று மேடையையே கலக்குவார்! நம்முடைய லியோனி அவர்களின் பட்டிமன்றங்களை பார்க்க எவ்வளவு மக்கள் கூடுவார்களோ, அதைவிட அதிகமாக அவருடைய பட்டிமன்ற கேசட்டுகளை மக்கள் விரும்பி வாங்கினார்கள்.

பட்டுக்கோட்டையா? கண்ணதாசனா? பழைய பாடலா? புதிய பாடலா? என்று அவரின் ஜனரஞ்சகமான பட்டிமன்றங்கள் ஒலிக்காத வீடுகளும் இல்லை! கேட்காத மக்களும் இல்லை! கேசட் - சி.டி. கடந்து, இன்றைக்கும் யூடியூபில் லியோனியின் பட்டிமன்றங்களை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்! 5 ஆயிரத்துக்கும் அதிகமான மேடை நிகழ்வுகள், தொலைக்காட்சியில் இசைக்குழுவினரோடு இணைந்து பாட்டுமன்றம் - இசையமைப்பாளர்கள் - நாட்டுப்புற கலைஞர்கள் கூட இணைந்து உலகம் முழுவதும் நிகழ்ச்சிகள் என்று ஏராளமான சாதனைகள் படைத்திருக்கிறார். நம்முடைய லியோனி அவர்களின் சிறப்பு என்னவென்றால், அவருடைய நகைச்சுவை சிரிக்க மட்டுமல்ல, சிந்திக்கவும் வைக்கும்! மறுபடி மறுபடியும் கேட்க தூண்டும்! இதுதான் லியோனி அவர்களுடைய தனித்தன்மை!

கலைஞரின் ரசிகராக கழகத்தில் இணைந்தவர் லியோனி!

இப்படி, பட்டிமன்ற மேடைகளில் கலக்கிக் கொண்டிருந்த லியோனி அவர்கள், தான் கலைஞரின் ரசிகர் என்று பெருமையோடு சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்! இணைந்ததும், கலைஞர் தொலைக்காட்சியில் "நல்லாப் பேசுங்க... நல்லதையே பேசுங்க" என்ற பேச்சரங்க நிகழ்ச்சியை 300 வாரங்கள் நடத்தினார். 100 வாரங்கள் பேச்சுத் திருவிழாவை நடத்தினார். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மூலம், நூற்றுக்கும் மேற்பட்ட பேச்சாளர்களை உருவாக்கினார். மக்களுக்கு அடையாளம் காட்டினார்!

அதுமட்டுமல்ல, பெருமையோடு சொல்கிறேன்... திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். கழக மேடைகளிலும், பட்டிமன்ற மேடைகளிலும், தொலைக்காட்சிகளிலும் கொடிகட்டிப் பறக்கின்ற நம்முடைய லியோனி அவர்கள் பல்லாண்டு வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தினார்.

சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (31.1.2026) நடைபெற்ற "லியோனி ஆகிய நான்" 50ஆம் ஆண்டு பொன்விழா நிகழ்ச்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து உரையாற்றினார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பழனிசாமியின் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் வீழ்த்தி 2026-ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் படை மீண்டும் ஆட்சி அமைக்கும்!

சர்வாதிகாரி மோடியிடம் மண்டியிடும் பழனிசாமி சர்வாதிகாரம் பற்றி பேச அருகதையில்லை!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதில்!

சென்னை, பிப்.1-

2026 தேர்தலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் படை மீண்டும் ஆட்சி அமைத்து, எடப்பாடி பழனிசாமியின் எதிர்க்கட்சி தலைவர் அந்தஸ்தையும் வீழ்த்தும் மோடி என்ற சர்வாதிகாரியைப் போற்றிக் கொண்டிருக்கும் பழனிசாமி, சர்வாதிகாரி பற்றியெல்லாம் பாடம் எடுக்க அருகதை இருக்கிறதா? என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

உலக சர்வாதிகாரிகள் அத்தனை பேரின் டி.என்.ஏ.வாக இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, ஹிட்லர், முசோலினி, நீரோ போன்றவர்களை எல்லாம் தி.மு.க. ஆட்சியின் மீது அடைமொழியாகக் காட்டுவது அரசியல் அவலம். வரலாறு தெரிந்தால் பேசுங்கள் பழனிசாமி அவர்களே! இல்லையென்றால் வழக்கம் போல அடிமைத்தனம்

என்ற விசுவாசத்தை மட்டுமே மோடிக்குக் காட்டிக் கொண்டிருங்கள். ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லரை இரண்டாம் உலகப்போரின் இறுதியில் வீழ்த்தியது ஸ்டாலினின் செம்படை தான். இந்தச் சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் படை மீண்டும் ஆட்சி அமைத்து, உங்களின் எதிர்கட்சி என்ற அந்தஸ்தையும் வீழ்த்தும். எதிர்க் கட்சித் தலைவர் பதவியையும் பறிகொடுத்துவிட்டு நிற்கப் போகிறீர்கள்!

தமிழ்நாட்டில் திமுக கூட்டணிதான் வெற்றி பெறும் என்றும் தமிழ் நாட்டில் பெண்களின் பெரும்பான்மையான ஆதரவு திமுகவிற்குத் தான் உள்ளது என்றும் முன்னணி ஊடகங்களில் கருத்துக் கணிப்புகள் வெளியாகி, தமிழ்நாட்டு மக்களின் உணர்வைப் பிரதிபலித்துக் கொண்டிருப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், வெற்றி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, அவதூறுகளை யாவது அள்ளித் தெளிப்போம் என சூனா பானாவாக கிளம்பி விட்டார் பழனிசாமி!

விரக்தியில் பழனிசாமி!

மீண்டும் திமுக ஆட்சியைப் பிடிக்கும் என்ற கருத்துக்கணிப்புகளால் விரக்தியில் என்ன செய்வது என்று தெரியாமல் அறிக்கை என்ற பெயரில்

கிறுக்கித் தள்ளியிருக்கிறார் பழனிசாமி.

டெல்லியில் சதித்திட்டம் தீட்டி சர்வாதிகார எண்ணத்தோடு தமிழ் நாட்டின் மீது ஏவப்படும் எந்த ஆதிக்கத்தையும் வெற்றியடைய விடமாட்டோம். எந்தக் கொம்பனாலும், தமிழ்நாட்டைத் தலைதாழ்த்தி விட முடியாது என்பதில் உறுதியாகப் போரடிக் கொண்டிருப்பது திராவிட மாடல் அரசும் மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சரும் தான். ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டுக்குச் செய்யும் அநீதிகளுக்கும் அவர்களது தமிழ்ப் பகை நடவடிக்கைகளுக்கும் எதிராக 'தமிழ் நாட்டைத் தலைகுனிய விட மாட்டேன்'என்று சொன்னால் பழனிசாமிக்கு ஏன் எரிகிறது?

டெல்லி ஓனர்களுக்கு அடிமையாக வாழ்வதிலே தனக்கு நிகராக யாரும் வந்துவிடக் கூடாது எனப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் வாழ் நாள் அடிமை பழனிசாமி, சரித்திரப் புத்தகங்கள், சர்வாதிகாரிகள் என்றெல்லாம் நகைச்சுவை செய்து கொண்டிருக்கிறார். ஜனநாயகத்தைச் சீரழித்து இந்த நாட்டையே சர்வாதிகார ஆட்சியாக்கிவிடும் நோக்கத்தோடு நாளும் பொழுதும் ஆதிக்கத் திட்டங்களைச் செயல்படுத்துக் கொண்டிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. மோடி என்ற சர்வாதிகாரியைப் போற்றிக் கொண்டிருக்கும் பழனிசாமி, சர்வாதிகாரி பற்றியெல்லாம் பாடம் எடுக்க அருகதை இருக்கிறதா?

பொள்ளாச்சி சம்பவம்!

ஒன்றிய அரசின் காலில் விழுந்து, கைகோத்து தமிழ்நாட்டிற்குத் துரோகம் செய்கின்ற பழனிசாமிக்கு, தமிழ்நாடு முதலமைச்சரைக் குறைகூற எந்த அருகதையும் இல்லை. பொள்ளாச்சி சம்பவத்தை வேடிக்கை பார்த்துவிட்டு இப்பொழுது பெண்கள் பாதுகாப்பு பற்றிப் பேச தகுதியும் இல்லை. பழனிசாமியின் படுபாதக ஆட்சியில் தமிழ்நாட்டுப் பெண்கள் எப்படிப் பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தார்கள்? என்பதற்கு பொள்ளாச்சியே உதாரணம். தமிழ்நாட்டு மக்கள் அந்த அவலங்களை மறந்திருப்பார்கள் என்று நினைத்து பொய்களை அள்ளிவிட்டுக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் தான் போதைப் பொருள்களைத் தடுக்க வரலாற்றில் இல்லாத அளவுக்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. போதைப் பொருள் கடத்தல், விற்பனையில் ஈடுபடுபவர்கள் அதிரடியாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். கைது செய்யப்பட்டவர்களை விசாரித்தால் பின்னணியில் இயங்கும் போதைப் பொருள் மாஃபியாக்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. இந்த மாஃபியாக்களோடு தொடர்பில் இருப்பவர்களாக அதிமுக நிர்வாகிகள் இருக்கின்றனர். நடிகர்களுக்குப் போதைப் பொருள் விநியோகம் செய்த பிரசாத் என்பவருக்கு அதிமுக ஐடி விங் பொறுப்பு கொடுத்து அழகு பார்த்துவிட்டு, செய்தி வெளியில் தெரிந்ததும் அவசர அவசரமாக அவரைப் பொறுப்பிலிருந்து நீக்கிய உத்தமர்தான் பழனிசாமி.

ஏய்ப்பவருக்கே காலம் என்று எண்ணிவிடாதே என எம்.ஜி.ஆரின் பாடலை மேற்கோள் காட்டும் பழனிசாமிக்கு, அதே எம்.ஜி.ஆர் பாடிய அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு? தினம் அச்சப்பட்ட கோழைக்கு இல்லம் எதற்கு? என்ற பாடல் ஏன் நினைவுக்கு வரவில்லை. தமிழ்நாட்டில் திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் மீண்டும் அமையப் போகிறது. தமிழ்நாட்டில் இனி ஒரு நாளும் பாஜகவின் அடிமை ஆட்சி அமையப் போவதில்லை, பழனிசாமியின் அரசியல் அத்தியாயத்திற்கு 2026 தேர்தலோடு முடிவுரை எழுதப்படப் போகிறது என்கிற உண்மைகள் சுடுவதால் விரக்தியில் பழனிசாமி உதிர்த்து வரும் உளரல்கள் உண்மையாகி விடாது.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கத்தில் உள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடைபெற்ற சென்னை மண்டலக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் நிர்வாகிகளுக்கிடையேயான மாபெரும் 7v7 கிரிக்கெட் போட்டியை சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர் பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி., கழகத் தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் எஸ்.மதன் மோகன், வினோத் வேலாயுதம், நிவேதா ஜெசிகா, ஏவிஆர். கோபால் ராம், சுரேஷ் ஜெ.மனோகரன், எஸ்.கார்த்திக், வே.கௌதமன், வழக்கறிஞர் பி.கே.பாபு, முகமது இஸ்ரத், எஸ்.ஆர்.பார்த்திபன், தனுஷ் எம்.குமார், வாசிம் ராஜா, திருவரங்கம் நா. ஆனந்த், பா.பிரபாகரன், அணியின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் உள்ளனர்.

4 மாவட்டங்களில் நடப்பாண்டில்

கேழ்வரகு கொள்முதல் நவம்பர் 1 முதல் ஆரம்பம்!

அமைச்சர் அர.சக்கரபாணி வேண்டுகோள்!

சென்னை, பிப்.1-

நடப்பாண்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் கேழ்வரகு கொள்முதல் நவம்பர் 1--ஆம் தேதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அம்மாவட்ட விவசாயிகள் கேழ்வரகினை மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.48,860/- என்ற விலையில் நடப்பு ஆண்டு ஆகஸ்ட் 31 வரை நேரடி கொள்முதல் நிலையங் களில் விற்று பயன்பெற உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:-

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கேழ்வரகு கொள்முதல் செய்யும் திட்டம், கடந்த 2022-2023 கொள்முதல் பருவத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முதற் கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, 514 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது.

2023-2024 கொள்முதல் பருவத்தில் கூடுதலாக ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களைச் சேர்த்து, 4 மாவட்டங்களில் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து நேரடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1,889 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த

2024-2025 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகளிடமிருந்து 4050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், நடப்பு 2025-2026 கொள்முதல் பருவத்தில் மெட்ரிக் டன் ஒன்றிற்கு குறைந்தபட்ச ஆதாரவிலையாக ரூ.48,860/- வழங்கப்படுகிறது. இது கடந்த கொள்முதல் பருவ குறைந்த பட்ச ஆதார விலை ரூ.42,900/- ஐ விட மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.5,960/- கூடுதலாகும்.

மேலும், நடப்பு 2025-2026 -கேழ்வரகு கொள்முதல் பருவத்தில் 01.11.2025 முதல் 31.01.2026 வரை தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையம் திறந்து விவசாயிகளிடமிருந்து கேழ்வரகு கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டது.தற்சமயம் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 9 நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதில், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் இதுவரை 630.050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 351 சிறு குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், நடப்பு 2025--2026 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில் கேழ்வரகு விவசாயிகள் பயன்பெற ஏதுவாக, கேழ்வரகு கொள்முதல் கால வரம்பு 31/8/2026 வரை நீட்டித்து வழங்க தமிழ்நாடு அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டு, மேற்படி மாவட்டங்களில், நேரடி கேழ்வரகு கொள்முதல் தற்போது, 01.02.2026 முதல் 31.08.2026 வரை கால நீட்டிப்பு செய்து கேழ்வரகு கொள்முதல் செய்ய ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த அரிய வாயிப்பினைப் பயன்படுத்தி தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தாங்கள் விளைவித்த கேழ்வரகினைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் திறக்கப்படும் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அய்யப்பன்தாங்கல் ஊராட்சி தி.மு.க சார்பில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் நடைபெற்ற திராவிட பொங்கல் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 2,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை வழங்கினார். அருகில் ஊராட்சி குழு ஒன்றிய தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் ஜெமீலா பாண்டுரங்கன், எஸ்.ராஜாதேசிங்கு, பொன்.ஜீவா, கே.தங்கராஜ்,, சு.ஜனார்த்தனன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.